# கற்பகம் திங்கள் இதழ்

KATPAKAM

விலை ரூபா 10/-

மலர்-04 ஜூன்-2011 இதழ்-44


## குறளமுதம்-44

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-5 -அறத்துப்பால்-இல்லறவியல்**

"பழிஅஞ்சிப் பாத்துஊண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்"

ஈயாத கஞ்சன் என்று பிறர் பழித்தலுக்கு அஞ்சி தன் பொருளைப் பகுத்தறிந்து உண்ணும் வாழ்க்கையை மேற்கொண்டால் அவனது மரபு வழி (சந்ததி) அற்றுப்போதல் இல்லை.

# அங்கத்தவர் ஓய்வூதியம் 12 வீதமாக அதிகரித்து வழங்க சமாசம் தீர்மானம்!

**வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு வழங்கிவரும் ஓய்வூதியத்தை ஒரு வீதத்தால் உயர்த்தியுள்ளது.**



89வது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு இந்த ஓய்வூதிய அதிகரிப்புக்கு பொதுச் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளதை அடுத்து கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அனுமதி பெற்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அங்கத்தவர்களின் பங்களிப்புக்கு ஏற்ப இதுவரை காலமும் ஓய்வூதியம் 11வீதமாக வழங்கப்பட்டு வந்தது. ஆணையாளரின் அனுமதி கிடைக்கப்பெற்ற பின் 12 வீதமாக அதிகரிக்கப்படும்.

இவ் ஓய்வூதிய அதிகரிப்பின் மூலம் சுமார் 350க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் பயனடைய உள்ளனர்.

இதேவேளை சமாசம் நடைமுறைப்படுத்திவரும் விபத்து ஓய்வூதிய நலத்திட்ட நடைமுறை விதியில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதுவரைகாலமும் அங்கத்தவர் ஒருவர் தொழில் செய்யும் பொழுது ஏற்படும் விபத்து மரணங்களுக்கே இதுவரை விபத்துநிதி வழங்கப்பட்டு வந்தது. இத்திருத்தத்தின்மூலம் வேறு வகையிலும் அகால மரணத்தை தழுவிக்கொள்பவர்களுக்கும் இந்நிதியுதவி அவரது பின்னுரித்தாளிக்கு வழங்கப்பட வழிவகுத்துள்ளதாக சமாசத் தலைவர் த.சிவலிங்கம் தெரிவித்தார்.

## கூட்டுறவுதின விழாவை முன்னிட்டுப் போட்டிகள்!

89வது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு சமாச மட்ட போட்டிகளை நடத்த சமாசம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர்குழு உறுப்பினர்களுக்கான பேச்சு, கவிதை, கட்டுரை போட்டிகளும், முன்பள்ளி மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டி, குழுநடனப் போட்டி என்பனவும் நடத்தப்படவுள்ளன.

(2ம்பக்கம் பார்க்க)

## ஒரு இலட்சம் ரூபா அன்பளிப்பு!



வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் வாகனத் தரிப்பிடம் அமைப்பதற்கு ரூபா 1 இலட்சத்தை சமாசத்தின் ஆரம்பகால செயலாளர் க.நடராசா அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

அத்துடன் சமாசம் மூடித் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு சாவகச்சேரியிலுள்ள தனக்குச் சொந்தமான 6 பரப்பு காணியையும் இவர் வழங்கவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சமாச கூட்ட மண்டபம் திறப்பு!



சமாசத்தின் தலைமைகாரியாலயத்தின் மேல்தளத்தில் சுமார் 20 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட

(2ம்பக்கம் பார்க்க)

"கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்"

### சிந்தனைத்துளி

" 'நான்', 'எனது' என்ற எண்ணங்களை அறவே விட்டு ஆன்மானுபவத்தில் நிலைபெறுவதே முக்தி"

-ஸ்ரீ சங்கரர்-

## கற்பகக்கரு

### புரிந்துணர்வு தேவை!

அங்கத்தவர்களின் சொந்த நிதியில் இயங்கிவரும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமூகத்தோடு ஒன்றித்த செயற்பாடு குறைவுபடாது நிறைவாக இடம்பெறவேண்டும் என்பதே அங்கத்தவர்களினது எண்ணமாக உள்ளது.

சங்கங்களின் நிதிப் பங்களிப்புடன் செயற்பட்டுவரும் சமாசமானது தனது அங்கத்துவ சங்கங்களுக்கான சேவையை சரிவர வழங்குவதற்கு என்றுமே பின்நிற்பதில்லை. சமாசத்தினது சேவையின் பிரதிபலிப்பாக அங்கத்தவர்கள் பெறும் பயன்களை இங்கு நாம் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

சமாசம் அங்கத்தவர்களினதும், பணியாளர்களினதும் பல்வேறுவிதமான சமூக நலத்திட்டங்களுக்கு பெருந்தொகையான பணத்தை செலவுசெய்து வருவதை அங்கத்துவ சங்கங்களும், அச்சங்கங்களின் அங்கத்தவர்களும், நிர்வாகிகளும் நன்கறிவர்.

இந்நிலையில் அங்கத்துவ சங்கங்கள் சமாசத்திற்கு பெருந்தொகையான நிதியை வழங்கவேண்டிய ஒரு இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. நாட்டில் இடம்பெற்ற அசாதாரணமான சூழ்நிலைகளே இதற்குக் காரணமாக அமைந்துள்ளதென்பதை எவரும் மறுக்கமுடியாது.

1995ம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து சமாசத்திற்கு அதன் 18 அங்கத்து சங்கங்களும் பல இலட்சக் கணக்கான ரூபாவை வழங்கவேண்டியிருப்பதுபோல, சமாசமும் தனது அங்கத்துவ சங்கங்களுக்கு குறிப்பிட்டளவு தொகையை வழங்கவேண்டியுள்ளது.

சமாசத்திற்கு சங்கங்கள் வழங்கவேண்டிய நிதியும், சமாசம் சங்கங்களுக்கு கொடுக்கவேண்டிய நிதியும் தொக்கி நிற்பதனால் இரு திறத்தவரினதும் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதான சூழ்நிலை ஏற்படுகிறது.

இதிலிருந்து விடுபடுவதற்கு இரு திறத்தவரும் தங்களுக்குள் தாங்களாகவே புரிந்துணர்வுடன் கூடிய விட்டுக் கொடுப்புக்களுடன் ஒத்துப்போகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தொக்கிநிற்கும் இந்நிதியினால் சங்கங்களினது அபிவிருத்தி செயற்பாடுகளுக்கும் சமாசத்தின் சமூகநல அபிவிருத்தித் திட்டங்களுக்கும் குந்தகம் ஏற்படக்கூடிய சூழ்நிலைகள் தவிர்க்கமுடியாதவை ஆகும்.

எனவே சங்கங்கள் சமாசத்திற்கு வழங்கவேண்டிய நிதியை உடனடியாக முழுமையாக வழங்காவிட்டாலும் அவற்றை பகுதி பகுதியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமானால் ஆரோக்கியமான நிலையில் சங்கங்கள் பயணிக்க முடியும். அதேபோல் சமாசமும் சங்கங்களுக்கு வழங்கவேண்டிய நிதியினை அவர்களின் செயற்பாடுகளுக்கு ஏற்றவாறு பகுதி பகுதியாக வழங்க வேண்டும்.

இதன்மூலம் கூட்டுறவின் உண்மையான தார்ப்பரியத்தை தக்கவைத்துக்கொள்ள முடியும் என்பதை கற்பகம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

-ஆசிரியர்-

### வேலணைச் சங்கத்தில் மீண்டும் வெல்ல உற்பத்தி!

வேலணை ப.தெ.வ.அ.கூ. சங்கம் கடந்த 20 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் பனை வெல்ல உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றது.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக பல இடப்பெயர்வுகளையும் சொத்திழப்புக்களையும் சந்தித்த இச்சங்கமானது மீண்டும் தனது சொந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்டு பல முன்னேற்றகரமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

குறிப்பாக பனைசார் உற்பத்தி பொருள் விற்பனை நிலையத்தினை திறந்து அங்கு சங்கத்தால் உற்பத்தி செய்யப்படுகின்ற பனை வெல்லத்தினை விற்பனை செய்வதோடு, பதநீர் உற்பத்தி செய்கின்ற அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவை அதிகரித்து வழங்கியும் வருகின்றது.

மேலும் இச்சங்கம் தும்பு உற்பத்தித் தொழிற்சாலையினை ஆரம்பித்து தும்புசார் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனையில் ஈடுபட்டுள்ளதோடு, தகரப்பந்தல், பிளாஸ்ரிக் கதிரைகள், நீர்த்தாங்கிகள் என்பவற்றை வாடகைக்கு வழங்கியும் சங்கத்திற்கு வருமானத்தை ஈட்டுகின்றது.

### புதிய மனைகள் கையளிக்கப்படவுள்ளன!

89வது கூட்டுறவுதினத்தை முன்னிட்டு பண்டத்தரிப்பு, அச்சுவேலி, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய சங்கங்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள தமது அங்கத்தவர்களில் தலா ஒருவருக்கு வழங்குவதற்காக 5இலட்சம் ரூபா செலவில் புதிய மனைகளை அமைத்துள்ளன.

இவற்றை எதிர்வரும் ஜுலை மாதம் 2ம் திகதி கொண்டாடப்படவுள்ள கூட்டுறவு தின விழாவின்போது உரிய அங்கத்தவர்களிடம் கையளிக்கவுள்ளதாக இச்சங்கங்கள் தெரிவித்துள்ளன.


### சமாச பொதுக்கூட்ட மண்டபம்..... 1ம் பக்கத் தொடர்ச்சி

பொதுக்கூட்ட மண்டபம் கடந்த 18ம் திகதி சமாசத்தின் முன்னாள் தலைவர் தி.அமிர்தநாதரினால் திறந்து வைக்கப்பட்டது.

சமாசத் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கூ.அ.உ.ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், கூட்டுறவுத் திணைக்கள மாவட்ட கணக்காய்வு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சித்திரா, மாவட்ட கூ.அ. அலுவலர் த.பத்மானந்தன், தலைமைக் காரியாலய கூ.பரிசோதகர் இ.விஜயமோகனராஜா, கணக்காய்வாளர், சமாச பொதுச்சபை உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

### கூட்டு..... 1ம் பக்கத் தொடர்ச்சி

இப்போட்டிகள் சமாச மண்டபத்தில் நடைபெறும் எனவும், இவற்றுக்கான விண்ணப்பங்களை 05.07.2011ற்கு முன் சமாசத்திற்கு அனுப்பி வைக்கவேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சமாசத்தினால் அதன் செயலகத்தின் மேல் தளத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கூட்ட மண்டபத்தினை சமாசத்தின் முன்னாள் தலைவர் தி.அமிர்தநாதர், கூ.அ.உ.ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், சமாசத் தலைவர் த.சிவலிங்கம் ஆகியோர் நாடா வெட்டித் திறந்துவைப்பதையும், மண்டபத்தின் உட்புறத் தோற்றத்தினையும் மேலுள்ள படங்களில் காணலாம்.

**சென்ற இதழ் தொடர்ச்சி**

# நவீன கூட்டுறவு விஞ்ஞான முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்வதற்கான விஞ்ஞான ரீதியிலான தந்திரோபாயங்கள்!

## Scientific Stratagems to Develop the Modern Co-operative Scientific

இ.சுப்பிரமணியம்-B.A

சங்க அங்கத்தவர்கள் சுயநல மிகளையும் (Selfish-ness), ஆளு மையற்றவர்களையும் (Unpersona-lity), பொதுசன விருப்பமில்லாதவர்களையும் (Unpopular persions), பலவீனமானவர்களையும் (Unability persion) கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைப் பதவிக்கு தெரிவு செய்யாமல் புறந்தள்ளுவதன்மூலமும், திறமையும், அறிவும், ஆளுமையுமுள்ள பணியாளர்களைத் தோற்றுவித்தல் மூலமும் சங்கத்தில் பற்றும், விசுவாசமுமுள்ள அங்கத்தவர்களைத் தோற்றுவித்தல் மூலமுமே கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாகச் செயற்படமுடியும்.

நவீன காலத்தில் எல்லா வளர்ச்சியடைந்த நிறுவனங்களும் தமது தொழிற்பாட்டுக்குத் தேவையான தகவல்களைத் திரட்டல் (Collection of information), தகவல்களை மதிப்பிடுதல் (Valuation of information), தகவல்களை அபிவிருத்தி செய்தல் (Development of infomation), தகவல்களை பாதுகாப்பாக சேமித்து வைத்தல் (Security saving of information), தகவல்களை நிறுவனத்தில் அமுல்படுத்துதல் (Implementing the informationin the institution), போன்ற முகாமைத்துவப் பணிகளைச் சிறப்பாக நிறைவு செய்கின்றனர். கூட்டுறவு நிறுவனங்களும் இம்முகாமைத்துவப் பணிகளை தமது நிறுவனங்களில் சிறப்பாக அமுல்நடத்துவதன்மூலம் சிறப்பாகச் செயற்பட்டு வெற்றி பெறலாம்.

எதிர்காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்தவர்களின் பயிற்செய்கைக்கான காணி தொடர்பில் சொந்தக் காணிகளின் பரப்பளவு, குத்தகைக் காணிகளின் பரப்பளவு, மேட்டுநிலக் காணிகளின் பரப்பளவு, நீர் பாய்ச்சக்கூடிய காணிகளின் பரப்பளவு, தரிசு நிலத்தின் பரப்பளவு, அங்கத்தவர்களின் குடியிருப்புக் காணிகளின் பரப்பளவு, அங்கத்தவர்களின் கல்வியறிவு, குடும்பநிலை, குடும்ப உறுப்பினர் தொகை போன்றவற்றின் உண்மையான தகவல்களைத் திரட்டி வைத்திருந்தால் அங்கத்தவர்களை அபிவிருத்தி செய்வது சுலபமாக இருக்கும். இஸ்ரவேல், யப்பான், இந்தியா, சீனா போன்ற நாடுகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் இப்புள்ளி விபரங்களை சிறப்பாகத் திரட்டி வைத்திருப்பதால் அங்கத்தவர்களை நன்கு அபிவிருத்தி செய்து வெற்றிபெற முடிகின்றது.

எமது நாட்டிலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும், கொத்தணிகளும், சமாசமும் அங்கத்தவர்களின் குடியிருப்பு வசதிகளையும், கல்வி வசதிகளையும், குடும்ப நிலையையும் சங்கத் தொழிற்பரப்பிலுள்ள பனை தென்னை மரங்களின் தொகைகளையும் சரிவரத் திரட்டிச் சேமித்து வைத்தால் அங்கத்தவர்களை இலகுவில் அபிவிருத்தி செய்யலாம். இந்த வகையில் எமது பிரதேசத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும், கொத்தணிகளும், சமாசமும் இப்பணியை ஓரளவுக்காவது நிறைவு செய்துள்ளமை பாராட்டுக்குரியதாகும்.


கூட்டுறவுச் சங்கங்கள் இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் உற்பத்தி, கைத்தொழில், விவசாயம், பங்கீடு, சந்தைப்படுத்தல், கடன் வழங்கல், தொழில்நுட்பம் வழங்கல், வங்கிச்சேவை, போக்குவரத்துச் சேவை வழங்கல், கல்விச்சேவை வழங்கல், பாலர் பாடசாலைகளையும், முதியோர் கல்வி நிலையங்களையும், மகளிர் பயிற்சி நிலையங்களையும் நிர்மாணித்து நடத்துதல் போன்ற அத்தியாவசிய சேவைகள் யாவற்றையும் வழங்க வேண்டும்.

ஒவ்வொரு நிதி வருடமும் தொடங்கியதும் மாதா மாதம் சங்கத்தின் செயற்பாடுகள் யாவற்றையும் கணக்கறிக்கைகள்மூலம் (படிவம் 28 அல்லது 128) மதிப்பிட்டு மாதாந்தச் செயற்பாடுகள் யாவும் குறித்த மாதத்திற்குரிய நிதியாண்டுக்கான அபிவிருத்தித் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள உத்தேச விற்பனை, உற்பத்தி, பங்கீடு, சந்தைப்படுத்தல், கடன் வழங்கல், தேறிய இலாப மதிப்பீடுகளுடன் ஒத்திருக்கின்றனவாவென்பதை திட்டவட்டமாக மதிப்பிட்டு, அவை ஒத்திருக்காமல் குறைகள் தென்பட்டால், அக்குறைபாடுகளை அடுத்தடுத்துவரும் மாதங்களில் முழுமையாக நிறைவு செய்வதற்கான தொழிற்பாடுகளையும், செயற்பாடுகளையும் தோற்றுவிப்பதற்கான தந்திரோபாயங்களை கண்டறிந்து வெற்றிகரமாக குறைகளை நிவர்த்தி செய்வதற்கான பாதீட்டுக் கட்டுப்பாட்டை (Budjetary Control) செயற்றிறன் மிக்கதாக மாதாந்தம் கூட்டுறவு நிறுவனங்கள் செயற்படுத்தினால் போட்டிப் பொருளாதாரக் கட்டமைப்பில் ஏனைய பலம்பொருந்திய நிறுவனங்களுடன் வெற்றிகரமாகப் போராடி இலகுவில் மாபெரும் வெற்றியைப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கேற்ற வகையில் கைகொடுக்கக்கூடிய செயற்றிறன் மிக்க கூட்டுறவுத் தலைமைத்துவத்தையும் (Co-operative leadership), முகாமைத்துவத் தலைமைத்துவத்தையும் (Management leadership), சாமர்த்தியமுள்ள பணியாளர்களையும் (Skilful employes) உருவாக்கிக்கொள்ள வேண்டியது கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களின் மிக முக்கியமான பங்கு பணிகளாகும்.

(முற்றும்)

**யாழ்.மாவட்ட ப.தெ.வ.அ.கூ.நிறுவனங்களின் பணியாளர் நலன்புரி கூ.சங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் அங்கத்துவ சங்கங்கள், கொத்தணிகள் மற்றும் சமாசம் ஆகியவற்றின் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கான மாதாந்த ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியத்தை பெறுபவர்களில் ஒரு தொகுதியினர்.**

### அச்சுவேலி ப.தெ. வள அ. கூட்டுறவுச் சங்கம்


கு.கனேஷ்


அ.கணபதிப்பிள்ளை


ச.சுப்பிரமணியம்


க.சந்திரலிங்கம்

### பருத்தித்துறை ப.தெ. அ.கூ.ச.


ஆ.அழகரத்தினம்


க.தெய்வேந்திரம்

### சாவகச்சேரி ப.தெ.வள அ. கூட்டுறவுச் சங்கம்


சி.கந்தசாமி


வெ.சுப்பிரமணியம்


நா.பொன்னுத்துரை

### கோப்பாய் ப.தெ.வள அ. கூட்டுறவுச் சங்கம்


பொ.டொமினிக்




க.தங்கராசா

### கரவெட்டி ப.தெ. அ.கூ.சங்கம்


மு.மகாராசா


ஐ.சிவபாதம்

### கோண்டாவில் ப.தெ. அ.கூ.ச.


திருமதி ச.பஸ்மாதேவி


பி.டொமினிக்

### சங்கானை ப.தெ. அ.கூ.ச.


சி.மகேந்திரன்


ச.துரைசிங்கம்

### மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ. சங்கம்


ப.ரவீந்திரநாதன்

### பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ. சங்கம்


திருமதி ப.திசைமலர்

### ஊர்காவற்றுறை ப.தெ.வ.அ.கூ. சங்கம்


வே.தெய்வேந்திரன்

### தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ. ச.கொத்தணி


திருமதி கா.இராணி

### வடமாகாண ப.தெ.வ.அ.கூ. ச.சமாசம்


ஆ.செம்பொற்சோதி

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2011
# பயிற்சி வினாத்தாள்–4

தொகுப்பு: செல்வி மதனரூபி-பாரதிதாசன் (ஆசிரியை)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு கற்பகத்தில் வெளிவந்துள்ள பயிற்சி வினாத்தாளுக்குரிய விடைகளை சுயமாக கண்டறிந்து பிறிதொரு தாளில் விடைகளை எழுதி இவ்வினாத்தாளுடன் இணைத்து அடுத்த மாதம் 10ம் திகதிக்கு முன் "ஆசிரியர், கற்பகம், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 52, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சரியான விடைஎழுதுபவர்களின் பெயர் விபரங்கள் கற்பகத்தில் பிரசுரிக்கப்படும்.

## பகுதி-1

❁ பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின்கீழ் கீறிடுக.

01) மனிதர்கள் என்றாவது ஒரு நாள்............?
i) இறப்பார்கள் ii) அழுவார்கள் iii) சிரிப்பார்கள் iv) நோய்வாய்ப்படுவார்கள்

02) ஒரு சதுரத்தின் சுற்றவு 88cm எனின், அதன் நீளம் யாது?
i) 44cm ii) 22cm iii) 11cm iv) 8cm

03) வயலும் வயல்சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்?
i) நெய்தல் ii) பாலை iii) முல்லை iv) மருதம்

04) தற்போது எனக்கு வயது 10, எனது தம்பிக்கு வயது 7, எனக்கு 20 வயதாகும்போது தம்பியின் வயது என்னவாக இருக்கும்?
i) 3 ii) 13 iii) 17 iv) 27

05) வெற்றிலை என்பதை பிரித்தெழுதினால் வருவது
i) வெற்றி + இலை ii) வெறுமை + இலை iii) வெற்று + இலை iv) வெற் + இலை

06) பாடசாலையில் அதிகம் கிடைப்பது?
i) அடி ii) நண்பர் iii) ஓய்வு iv) போதனை

07) 1 கிலோ கிராம் பசளையின் விலை ரூபா 250.00 ஆகும். லக்ஷி 3,500 கிராம் பசளை வாங்கினாள். லக்ஷி வாங்கிய பசளைக்கு எவ்வளவு பணம் கடைக்காரரிடம் கொடுத்திருப்பாள்?
i) ரூ.875.00 ii) ரூ.750.00 iii) ரூ.125.00 iv) ரூ.578.00

08) தம்பியைவிட அண்ணனுக்கு எப்போதும் கூடுதலாக இருப்பது?
i) உயரம் ii) வயது iii) அறிவு iv) நிறம்

09) ஒன்பது + நூறு என்பதைச் சேர்த்தால் வருவது?
i) தொள்ளாயிரம் ii) தொண்ணூறு iii) ஒன்பது iv) நூறு

10) சதுரமுகி, உருளை என்பவற்றின் உச்சிகளின் எண்ணிக்கையை தருக?
i) 12, 6 ii) 8, 0 iii) 0, 8 iv) 6, 4

## பகுதி-2

❁ கீழ்க் காணும் பாடலை படித்து தரப்படும் வினாக்களுக்கு விடை தருக.

ஆழகு நிறைந்த மலர்களில்
ஆரிய வண்டு மொய்க்குமே
இனிய தேனை உண்டதும்
ஊள்ளம் கனியப் பாடுமே

கொவ்வைச் சொண்டால் கொத்தியே
கொவ்வைக் கனியை உண்ணுமே
உண்ட மகிழ்வில் திளைத்துமே
இனிய மழலை பேசுமே

கரிய காக்கை கரைந்துமே
களவில் உணவைத் தேடுமே
கண்ட உணவைத் தானுமே
கரைந்து கூவி உண்ணுமே

01) மலர்கள் பற்றி என்ன கூறுவீர்?
02) யாருடைய உள்ளம் கவி பாடும்?
03) கொவ்வைக் கனி என்ன நிறம்?
04) இனிய மழலை பேசுவது எது?
05) காக்கையின் நல்ல குணம் ஒன்று தருக?
06) இப்பாடல்களில் காணப்படும் 2 பறவைகளின் பெயர்களைத் தருக?
07) வண்டுகள் மலரில் மொய்ப்பது ஏன்?
08) இப்பாடலில் வரும் " கூவி " என்பதன் பொருள் என்ன?

❁ கீழே தரப்படும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலப் பதத்தைத் தருக?

09) கிளி-...................... 10) கனி-......................


- கீழே தரப்படும் ஆங்கில சொற்களுக்குரிய தமிழ்ப் பதத்தை தருக?

11) Bee-.................. 12) Crow-........................

- கீழ்வரும் தமிழ்ச்சொற்களுக்குரிய சிங்களச் சொல்லைத் தருக?

13) மாமா-........................ 14) மகள்-......................... 15) பாட்டன்-.......................

- ஒரு கடைக்காரன் தனது விற்பனைக்காக வாங்கிய பொருட்களின் கொள்விலையின் விபரங்கள் வரைபில் தரப்பட்டுள்ளன.




16) 1Kg சர்க்கரை ரூபா 52 எனின், வாங்கிய சர்க்கரையின் மொத்த விலை என்ன?
17) 250g தேயிலை ரூபா 100 எனின், வாங்கிய தேயிலையின் மொத்த விலை யாது?
18) 500g சீனி ரூபா 45 எனின், வாங்கிய சீனியின் மொத்த விலை யாது?
19) 2Kg மா ரூபா 150 எனின், வாங்கிய மாவின் மொத்த விலை என்ன?
20) 5Kg அரிசி ரூபா 450 எனின், வாங்கிய அரிசியின் விலை யாது?

- பின்வரும் வினாக்களுக்கான சரியான விடையை எழுதுக.

21) உலகப் பொதுமொழி எனப்படும் நூல் எது?
22) இலங்கையின் தற்போதைய சனாதிபதி யார்?
23) தற்போது பதிவுத் தபாலுக்குரிய கட்டணம் எவ்வளவு?
24) வைகாசி மாதத்தில் கொண்டாடப்படும் பௌத்தர்களின் முக்கிய தினம் எது?
25) வீதி சமிக்ஞை விளக்குகளில் காணப்படும் நிறங்கள் எவை?

- கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.

26) பட்டம் ஏற்றும்போது முச்சையில் கட்டிய நூலை காற்று வீசும் திசைக்கு எதிராக இழுத்துச் சென்றால்தான் பட்டம் ஏறும். ( )
27) சிவப்பு, பச்சை, மஞ்சள் என்பன மூலவர்ணங்களாகும். ( )
28) சினிமா படம் பார்ப்பதில் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு ( )
29) மனிதனுக்கு நன்மைசெய்யும் பிராணி அல்லாதது காகம் ஆகும். ( )
30) இலவச பாடநூல் விநியோகத்தை C.W.W.கன்னங்கரா ஆரம்பித்து வைத்தார். ( )

- "சமாதானமான இச்சூழ்நிலையில் நான்......" எனும் தலைப்பில் 6 முழுமையான வாக்கியங்களை (எழுவாய், பயனிலை உட்பட நான்கு சொற்களேனும் இருத்தல் வேண்டும்) எழுதுக.

## வினாத்தாள் -3 விடைகள்

**பகுதி 1**

| | |
|---|---|
| 1) i | 6) ii |
| 2) ii | 7) iii |
| 3) iii | 8) iv |
| 4) iv | 9) i |
| 5) i | 10) ii |

1) நாடு அழகுபெறும், மன் வளமுறும்.
2) பழங்கள்
3) தரு/விருட்சம்
4) புழுக்கள்
5) தேசம்
6) நிழல்
7) கனிகள்/பழங்கள்
8) வனம்

**பகுதி 2**

9) TREE
10) FLOWERS
11) பழங்கள்
12) மாம்பழங்கள்
13) தண்ணீர்
14) மாணவி
15) இருங்கள்
16) 20+32=52
17) 22+18+20=60
18) தரம்-3 மாணவர்கள்
19) 41×25=1025
20) 97 பொதிகள்
21) இரட்டைச்சுழி
22) ஒலிம்பிக் வளையம்
23) ஐக்கிய நாடுகள் சபை
24) செஞ்சிலுவை
25) நிறுத்தவும்
26) (✓)
27) (✗)
28) (✓)
29) (✗)
30) (✓)

- வினாத்தாள்-2ன் வினாக்களுக்கு விடைகளை எழுதி எமக்கு அனுப்பி வைத்துள்ள மாணவியின் பெயர் விபரம் வருமாறு,

(இதில் பகுதி-1 இல் 4,5ம் வினாக்களுக்கும், பகுதி-2இல் 8, 28ம் வினாக்களுக்குமான விடைகளை சரியார்க்கவும்)

**சர்வானந்தம்-கௌசல்யா,**
**புன்னாலைக்கட்டுவன் வடக்கு,**
**கப்பம்புலம்.**

சென்ற இதழ் தொடர்ச்சி

6

# பனை வளத்தின் அபிவிருத்திக்கு வழி பிறக்குமா?

**பேராசிரியர் கு.மிகுந்தன்**
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்



பனங்களியின் பயன்பாடு இவ்வளவுதானா? இதனைப் பயன்படுத்தி வேறு உணவு வகைகளோ அன்றியும் வேறு பொருட்களும உருவாக வழி பிறக்காதா? எம்மினிய உறவுகளே! புதுமைகளுக்காக ஏங்கியிருக்கும் நீங்கள் இதிலும் புதுமைகளை உட்புகுத்தி புது வகைப் பொருட்களைக் கண்டுபிடியுங்களேன்! பனங்களியை கோதுமை மாவுடன் சேர்த்து பனங்காய்க்காய் பண்டம் செய்வது மட்டும்தான் உங்கள் புதுமையோ? இன்னும் இன்னும் புதுமைகள் உட்புகுத்தப்பட்டு பனை வளத்தை, அதன் பயனைப் புதிய அத்தியாயத்துக்கு எடுத்துச் செல்வோம் வாருங்கள்.

கற்பகதருவின் வளங்களைப் பற்றியும் சம காலத்தில் வடபகுதியில் நடைபெறும் அபிவிருத்திக்குள் இதனையும் உள்வாங்க வேண்டியதன் தேவைபற்றியும் எடுத்துரைத்து இதன்மூலம் பனை வளத்தையே நம்பி வாழ்ந்த, வாழுகின்ற மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பி எங்களூர் வளஞ்சார்ந்த பொருளாதார விருத்தியையே இதில் மையப்படுத்தப்பட்டிருக்கிறது. பனைவளம் என்பது வடபகுதிக்கானதும் இப்பிரதேசத்தின் சிறப்புக்குரியதுமாகும். எமது அடையாளத்தின் பிரதிபலிப்பாகவும் விளங்கும். கற்பகதருவின் வளத்தை மேலும் அபிவிருத்தி செய்யவேண்டியது சமகாலத்தினது தேவையாகவே இருக்கின்றது. நடந்து முடிந்த போர்ச் சூழலுக்குள் சிக்கி அழிந்த மரங்களுள் தென்னையும் பனையும் தான் அதிகம். இழந்த வள்த்தை கட்டியெழுப்ப நிறுவனமயப்பட்ட பனை அபிவிருத்திச் சபை தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை இவற்றுடன் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் முனைப்புக் காட்டி தத்தமது திட்டங்களுக்கூடாகப் பல வேலைத் திட்டங்களை இனங்கண்டு செயற்படுத்திவரும் அதே வேளையில், இனிவரும் நூற்றாண்டினது தேவைக்கேற்ப மேலும் பல திட்டங்கள் உருவாக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்படவேண்டியது அவசியமே.

### தன்னலமற்ற சேவைசெய்த தொழிலதிபர்கள்

வடபகுதியெங்கும் பனம் விதைகளை நடுகைசெய்து எதிர்காலச் சந்ததியின் நல்வாழ்வுக்காகச் சிந்தித்துச் செயலாற்றிய முன்னைநாள் **"மில்க்வைற்"** தொழிலதிபர் கனகராசாவும் அவருடனிணைந்து இப்பெருமைசார் கைங்கரியத்தினுள் தன்னையும் உள்வாங்கிய **"அண்ணா கோப்பி"** தொழிலதிபர் நடராசா போன்றவர்களின் பணி ஆண்டாண்டு காலமாகப் போற்றுவதற்குரியது. தொழிலதிபர்களாக இருந்து இந்த வளத்தின்பால் கொண்ட விருப்பினால் இவர்களின் இப்பணி சிறப்புற்ற தோடல்லாது இட்ட விதையனைத்தும் வளர்ந்தெழும்பி வடலிகளாக உயர்ந்து நிற்கும்போது இப்பனைகளின் பின்னால் இப்பெருமகனார்களின் சமூகசேவை எம் அனைவருக்கும் முன்னுதாரணமாகக் கட்டியங்கூறி நிற்கின்றது. இவர்கள் போல இன்னும் பல சமூக சேவையாளர்களை இத்தேசம் வேண்டி நிற்கிறது. போர் உக்கிரமாக நிகழ்ந்த இடங்களில் இம்மரங்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுப்போக ஆங்காங்கே தடுப்பரண்களுக்காகவும் தறிக்கப்பட்டு விட்டன. இழந்த பனைகளுக்காக மீளவும் பனம் விதைகளை நடவேண்டிய தேவை எழுந்துள்ளது. பயிர்செய்கைக்கான வளமான நிலங்கள் தவிர்ந்த இடங்களில் திட்டமிட்ட முறையில் பனம் விதைகளை நடவுசெய்தல் வேண்டும். இன்னும் வடபகுதி அபிவிருத்தியில் யாழ்ப்பாணத்தில் உயர்ந்தெழும்பும் கட்டடங்களுக்காக வள்மான பயிர்ச்செய்கை நிலங்கள் உருமாறும் அதே வேளை கட்டுமானப் பணிகளுக்காகப் பனைமரங்கள் மேலும் தறிக்கப்படும் வாய்ப்புக்கள் அதிகமே. தேவைக்கான செயற்பாடாக இருப்பினும் அதற்கு மாற்றீடாகப் பனம் விதைகளை நடவு செய்தல் இழப்பதை மீளக் கொண்டுவருவதாக அமையும்.

### பனையிலிருந்து பெறப்படும் பொருட்களினை மதிப்பேற்றம் செய்வதன் அவசியம்

பனையோலையும் அதிலிருந்து தனியாகப் பிரித்தெடுக்கப்படும் ஈர்க்கும் பலவிதமான பொருட்களை உருவாக்கப் பயன்படுகின்றன. குறிப்பாகப் பெட்டி, கடகம், பாய், உறி, திருவணை, சுளகு, நீத்துப்பெட்டி, நீர் அள்ளி ஊற்றும் பட்டை, கைப்பை, தொப்பி, கூடை இன்னும் பல பொருட்களைப் பனையோலை மற்றும் ஈர்க்கினைப் பயன்படுத்தி உருவாக்குகின்றனர். குடிசைக் கைத்தொழிலாக இருக்கும் இத்தொழிற்றுறையைச் சமகாலத் தேவைக்கும் விருப்பத்துக்கும் இசைவாகத் தரமுயர்த்த வேண்டும். இப்பொருட்களின் மதிப்பேற்றத்தினை மையப்படுத்திய ஆய்வுகளே இதற்கான பதிலைத் தரமுடியும். அபிவிருத்தியின் வெளிப்பாடு யாழ்ப்பாணத்தில் தெரிய ஆரம்பித்திருக்கும் இந்த நாட்களில் இங்கு சுற்றுலாவரும் தென்பகுதி மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் விரும்பி வாங்கிச் செல்லும் பொருட்களாக இவை தரமுயர்த்தப்படவேண்டும். இதற்காக விஞ்ஞானத்தின் எந்தவிதமான தொழில்நுட்பத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாம். பரிசுப்பொருட்களாக, கௌரவிப்புப் பொருட்களாக இவை உலகத் தரத்துடன் எங்களூர், வெளியூர் மற்றும் உலக சந்தையில் வலம் வரவேண்டும். வேறு நாடுகளிலிருந்து இவ்வாறான பொருட்கள் உலக சந்தைக்குள் வரும்போது எமது பிரதேசத்துப் பொருட்களுக்கும் நிச்சயமாக இந்த வாய்ப்பு அதிகமே.

பனை உற்பத்திப் பொருட்களை வெளிநாட்டுச் சந்தைகளில் விடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன. இந்த வாய்ப்புக்கள் உலகச் சந்தையில் போட்டியை உருவாக்கவே செய்யும். ஆனாலும் எமது பண்டங்கள், எமது பிரதேசத்துப் பொருட்கள் என எமது புலம்பெயர்ந்த உறவுகளின் கவனத்தை ஈர்க்கும்போது மட்டுமே இது சாத்தியமாகும். ஆனாலும் காலம் போகிற போக்கில் அநேகமான புலம்பெயர்ந்த உறவுகளின் சந்ததிகளுக்கு எமது பிரதேசத்து தொடர்புகள் அறுந்துபோகும் வாய்ப்புக்களுண்டு என்பதையும் நாம் கவனிக்கத் தவறக்கூடாது. இப்படியாகும்போது எமது பாட்டன், பாட்டியின் பூர்வீகத்தையே மறந்து எங்களூர் சுதேசியப் பொருட்களிலுள்ள ஈடுபாடும் வெகுவாகக் குறைந்துவிடும். மாறாக எமது பிரதேசத்தின் மகிமை பற்றியும் எங்கள் உறவுகள் பற்றியும் சொல்லித் தமது பிள்ளைகளை வளர்க்கும் மக்களும் இருக்கவே செய்கிறார்கள். இவர்களுக்கிடையிலான உறவுப் பாலம் உரமாகும் வண்ணம் நாமனைவரும் இன்னும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியிருக்கிறது. **(வளரும்)**

## தேசிய மட்டத்திற்கு தெரிவானார்!



89வது சர்வதேச கூட்டுறவு தினவிழாவை முன்னிட்டு கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மெய்வல்லுநர் போட்டியில் சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர் தி.சுரேஸ் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் மாவட்ட, மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் குருநாகலில் இம்மாதம் 30ம் திகதி நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காக செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது..

## விபரம் அனுப்பக் கோரிக்கை

சமாசத்தின் சமூக மேம்பாட்டுக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வருடம்தோறும் நடத்தப்பட்டுவரும் சிறந்த அங்கத்தவர்கள், 5ம் ஆண்டு புலமைப்பரிசில் சித்திபெற்ற அங்கத்தவர், பணியாளர்களின் பிள்ளைகளுக்கு பரிசில் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு 89வது சர்வதேச கூட்டுறவுதின விழாவின் இறுதிநாளன்று நடைபெறவுள்ளது.

2009, 20010ம் ஆண்டுக்கான சிறந்த அங்கத்தவர்களாக சங்கங்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்களையும், புலமைப்பரிசில் சித்திபெற்ற அங்கத்தவர்கள், பணியாளர்களின் பிள்ளைகளின் பெயர் விபரங்களையும் அத்தோடு, கல்வி பயிலும் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றுக் கடிதங்களையும் எதிர்வரும் 30-06-2011ம் திகதிக்கு முன்னர் சமாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு சமாசம் கேட்டுள்ளது.

எமது மண்ணின் தனித்துமான வளமான பனை வளத்தை பாதுகாத்து, வளப்படுத்தி எமது பொருளாதாரத்தை மேம்படுத்துவோம்!

பனை வளத்தினைக் கொண்டு எம்மால் பல்வேறு வகையான உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுத்தமாகவும், சுவையாகவும், சுகாதார முறைப்படியும் எம்மால் தயார்படுத்தப்பட்ட பனைசார் உற்பத்திகளை நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

எமது பனைசார் உற்பத்திகள்!




காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

காரைநகர் தொ.பே: 0213737754

## கூட்டுறவு ஆணையாளர் வருகை!

வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் 14.06.2011ம் திகதி அன்று சமாசத்திற்கு வருகை தந்திருந்தார். இதன்போது சமாசத்தால் அமைக்கப்பட்ட புதிய கூட்ட மண்டபத்தினை பார்வையிட்டு திருப்தியடைந்த அவர், முடிக்கப்படவேண்டியுள்ள ஏனைய வேலைகளையும் விரைவாக செய்து முடிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இம்மண்டபம் பொது நிகழ்வுகளுக்கும் மற்றும் கூட்டுறவுசார் பயிற்சிகள், கருத்தரங்குகள் நடத்துவதற்கும் பொருத்தமான மண்டபமாக அமைந்திருப்பதால் மேற்படி நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளை தான் செய்துதருவதாக கூறினார்.

## குருநாகலில் தேசியமட்ட போட்டிகள்!

89வது சர்வதேச கூட்டுறவுதின விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் தேசிய மட்டத்திற்கு தெரிவாகிய பண்டத்தரிப்பு, சுன்னாகம், மானிப்பாய், அச்சுவேலி ஆகிய ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் வெற்றிபெற்ற போட்டியாளர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக இம்மாதம் 28ம் திகதி குருநாகல் செல்லவுள்ளதாகவும், இவர்களுக்கான பிரயாண ஒழுங்குகள் மற்றும் வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2011ம் ஆண்டு ஜூன் மாதம் வெளியிடப்பட்டது.